# Launch of Revenue Department – Online Services by the Hon'ble Chief Minister of Puducherry

The **citizen-centric services** of Department of Revenue and Disaster Management (DRDM), Govt. of Puducherry were launched by the **Hon'ble Chief Minister of Puducherry Shri. N. Rangasamy on 10.08.2026** in the presence of **Shri. Kulothungan A., I.A.S., Special Secretary-cum-District Collector (DRDM)** and **Dr. N. Raveendran ASIO, NIC Puducherry**. Shri. B. Shafiulla, HoD & Scientist-E and Shri. A. Sundiramurthi, Project Coordinator & Scientist-D from NIC Puducherry were participated in the event.












The portal (https://serviceonline.gov.in powered by ServicePlus) offers citizen-centric services of Department of Revenue and Disaster Management (DRDM) such as obtaining of Residence Certificate, Nativity Certificate, Income Certificate, EWS (Economically Weaker Section) Certificate, BCM (Backward Class Muslim) Community Certificate, BT (Backward Tribe) Caste Certificate, EBC (Extremely Backward Class) Caste Certificate, MBC (Most Backward Class) Certificate, OBC (Other Backward Class) Certificate, SC (Scheduled Caste) Certificate, ST (Scheduled Tribe) Certificate, Legal Heir Certificate and Patta Transfer online. The submission of applications, scrutiny & processing, payment of fees and issue of certificate(s) & Patta(s) with **QR code (for genuineness verification)** have been made online. The status of the application(s) will be intimated to applicant(s) through **SMS** and/or **Email**. The certificates issued online can be downloaded from **DigiLocker** as well. This e-governance initiative will considerably **reduce the time taken** for issuing certificate(s) & Patta(s), avoid human intervention and will **ensure the transparency** in the entire process.

**Press Release**

புதுச்சேரி அரசு

முதலமைச்சர் அலுவலகம்

செய்திக்குறிப்பு

புதுச்சேரி, நாள்: **10.08.2026**

புதுச்சேரி அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் வருவாய்த்துறை சேவைகளை எளிமையாகவும், விரைவாகவும் வழங்கும் நோக்கில் தேசிய தகவலியல் மையத்தின் (NIC) தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய இணையவழிச் சேவைத் தளம் (Online Portal:https://serviceonline.gov.in) உருவாக்கப்பட்டுள்ள **புதிய இணையவழி சேவைத் தளம் (Online Portal)** மாண்புமிகு புதுச்சேரி முதலமைச்சர் அவர்களால் இன்று தொடங்கி வைக்கப்பட்டது.

2. இப்புதிய இணையவழி சேவைத் தளத்தின் மூலம் பொதுமக்கள் குடியிருப்புச் சான்றிதழ் (Residence Certificate), வருமானச் சான்றிதழ் (Income Certificate), சாதி/சமூகச் சான்றிதழ் (Caste/Community Certificate), வாரிசு சான்றிதழ் (Legal Heir Certificate), பட்டா பெயர் மாற்றம் (Patta Transfer) உள்ளிட்ட பல்வேறு வருவாய்த் துறை சேவைகளுக்கு தங்களது இருப்பிடத்திலிருந்தே இணையவழியில் எளிதாக விண்ணப்பித்து, சேவைகளைப் பெற முடியும்.

3. கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசு நலத்திட்டங்களுக்குத் தேவையான சான்றிதழ்களைப் பெறுவதற்காக பொதுமக்கள் வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு நேரில் வர வேண்டிய தேவையைக் குறைத்து, சேவைகளை எளிதில் பெற வழிவகை செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

4. **இணையவழி விண்ணப்பத்தின் முக்கிய நன்மைகள்:**

(i) **விண்ணப்பங்களை எங்கிருந்தும் எளிதாக பதிவு செய்யலாம்.**

(ii) **தேவையற்ற நேர விரயம் மற்றும் அலுவலகங்களுக்கு நேரில் செல்லும் சிரமம் தவிர்க்கப்படும்.**

(iii) **விண்ணப்பத்தின் நிலையை இணையவழியில் எளிதாக அறிந்துகொள்ளலாம்.**

(iv) **விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்ப முன்னேற்றம் குறித்து குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் (E-mail) மூலம் தகவல்கள் அனுப்பப்படும்.**

**(v) சேவைகள் வெளிப்படையாகவும், விரைவாகவும் வழங்கப்படும்.**

5. பள்ளி மாணவர்களுக்கு கல்வி, உதவித்தொகை மற்றும் பிற தேவைகளுக்காக குடியிருப்பு, வருமானம் மற்றும் சாதி/சமூகச் சான்றிதழ்கள் அடிக்கடி தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு, மாணவர்களும் பெற்றோர்களும் இச்சான்றிதழ்களுக்காக வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியத்தைத் தவிர்க்கும் வகையில் இச்சிறப்பு இணையவழி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5. அதன்படி, 17.08.2026 முதல் புதுச்சேரியில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பள்ளி மாணவர்களும் இவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பெற்றோர்கள் தேவையான ஆவணங்களை சம்பந்தப்பட்ட பள்ளியில் சமர்ப்பித்தால் போதுமானது. பள்ளி நிர்வாகத்தின் ஒருங்கிணைப்புடன் விண்ணப்பங்கள் இணையவழியில் பதிவு செய்யப்பட்டு, வருவாய்த்துறையின் உரிய சரிபார்ப்புக்குப் பின்னர் சான்றிதழ்கள் மாணவர்கள் பயிலும் பள்ளியின் மூலமாகவே வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நேரம் மற்றும் அலைச்சல் குறைவதுடன், தேவையான சான்றிதழ்களை எளிதாகவும் உரிய காலத்திலும் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7. இணையவழியில் வழங்கப்படும் சான்றிதழ்களில் QR குறியீடு (QR Code) இடம்பெறும். இதனைப் பயன்படுத்தி சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை உடனடியாக சரிபார்க்க முடியும். இதன் மூலம் போலிச் சான்றிதழ்களின் பயன்பாட்டைத் தடுப்பதுடன், கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை எளிதில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

8. மேலும், இத்தளத்தில் வழங்கப்படும் மின்னணு சான்றிதழ்களை பொதுமக்கள் பாதுகாப்பாகப் பெற்று பயன்படுத்தும் வகையில் DigiLocker வசதியும் இணையவழி தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ்களை DigiLocker வாயிலாகப் பெற்று, தேவையான நேரங்களில் மின்னணு வடிவில் பயன்படுத்துவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

9. இந்த முயற்சி, வருவாய்த்துறை சேவைகளை பொதுமக்களுக்கு **எளிதாகவும், விரைவாகவும்,** வழங்குவதுடன், பொதுமக்களின் நேரம் மற்றும் அலைச்சலைக் குறைத்து, **மின்னணு நிர்வாகத்தை** மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையாக அமையும்.

**(ந. ரங்கசாமி)**

**Media clippings**




## புதுச்சேரி மக்களுக்கு முக்கிய அறிவிப்பு!

**புதுச்சேரியில் வருமானம், குடியிருப்பு, சாதி, வாரிசு சான்றிதழ் மற்றும் பட்டா பெயர் மாற்றம் உள்ளிட்ட வருவாய்த்துறை சேவைகளுக்கு இன்று முதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கும் புதிய வசதி தொடக்கம்.**

**விண்ணப்பிக்க வேண்டிய ஆன்லைன் முகவரி: https://serviceonline.gov.in/**

# Pondy CM inaugurates an online portal



Puducherry, Aug 11. Puducherry chief minister N Rangasamy on Monday inaugurated an online portal in a bid to provide the services of the Puducherry Revenue and Disaster management department speedly, with the technical assistance from NIC.

According to a release from the office of the chief minister, using this online portal https://serviceonline.gov.in residence certificate, income certificate, Caste/ community certificate Legal Heir certificate, patta transfer certificate etc could be obtained online from the residence of the applicant. This will reduce the necessity of people visiting revenue offices to get the certificate required for education, employment and for government welfare measures. The aim of the portal is to simplify the procedures to obtain certificates.

An applicant can register from any place, waste of time could be avoided, the status of the applications could be known easily online, the applicants will get SMS and emails about the progress of their application, services will be fast and transparent are some of the benefits of the portal.

The students of the government, government aided and private schools could utilize this service from 17-08-2026. There will be a QR Code on the certificates issued online and using this QR code it could be verified whether the certificate is real or fake. Further, Digilocker facility also is integrated with the portal.

## வரும் 17ம் தேதி அமலாகிறது

# ஆன்லைனில் சாதி, குடியிருப்பு சான்றிதழ் பெறும் திட்டம்

## முதல்வர் ரங்கசாமி துவக்கி வைத்தார்



புதுச்சேரி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சாதி, வருமானம், வாரிசு சான்றிதழ்கள் உள்ளிட்டவற்றை இணையவழி மூலம் பெறும் சேவையை முதல்வர் ரங்கசாமி துவக்கி வைத்தார். அருகில் அமைச்சர் சிவக்கொழுந்து, எதிர்க்கட்சி தலைவர் நாஜிம், ஏகேடி ஆறுமுகம் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன்.

புதுச்சேரி, ஆக. 11: சாதி, குடியிருப்பு, வருமானம், பட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ் உள்ளிட்ட சான்றுகளை இணையவழி மூலம் பெறும் சேவையை முதல்வர் ரங்கசாமி துவக்கி வைத்தார்.

புதுச்சேரி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் இணையவழி சேவையின் மூலம் பொதுமக்கள் குடியிருப்பு, வருமானம் சாதி, சமூகச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ், பட்டா பெயர் மாற்றம் உள்ளிட்ட வருவாய்த்துறை சேவைகளை இருப்பிடத்திலிருந்தே இணையதளம் மூலமாக (*https://serviceonline.gov.in*) எளிதாக விண்ணப்பித்து, சான்றிதழ்களை பெற முடியும். பொதுமக்கள் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசு நலத்திட்டங்களுக்குத் தேவையான சான்றிதழ்களைப் பெறுவதற்காக வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு நேரில் வர வேண்டிய தேவையைக் குறைத்து, சேவைகளை எளிதில் பெற வழிவகை செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். விண்ணப்பங்களை எங்கிருந்தும் எளிதாக பதிவு செய்யலாம். தேவையற்ற நேர விரயம் மற்றும் அலுவலகங்களுக்கு நேரில் செல்லும் சிரமம் தவிர்க்கப்படும். விண்ணப்பத்தின் நிலையை அறிந்துகொள்ளலாம். விண்ணப்பதாரர்களுக்கு தங்களின் விண்ணப்ப முன்னேற்றம் குறித்து குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் தகவல்கள் அனுப்பப்படும். சேவைகள் வெளிப்படையாகவும், விரைவாகவும் வழங்கப்படும். பள்ளி மாணவர்களுக்கு கல்வி, உதவித்தொகை மற்றும் பிற தேவைகளுக்காக குடியிருப்பு, வருமானம் மற்றும் சாதி, சமூகச் சான்றிதழ்கள் அடிக்கடி தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு, மாணவர்களும் பெற்றோர்களும் இச்சான்றிதழ்களுக்காக வருவாய்த் துறை அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியத்தைத் தவிர்க்கும் வகையில் இணையவழி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

> **தேவையற்ற நேர விரயம் மற்றும் அலுவலகங்களுக்கு நேரில் செல்லும் சிரமம் தவிர்க்கப்படும்.**

அதன்படி, வரும் 17ம் தேதி முதல் புதுச்சேரியில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பள்ளி மாணவர்களும் இவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பெற்றோர்கள் தேவையான ஆவணங்களை சம்பந்தப்பட்ட பள்ளியில் சமர்ப்பித்தாலே போதுமானது. பள்ளி நிர்வாகத்தின் ஒருங்கிணைப்புடன் விண்ணப்பங்கள் இணையவழியில் பதிவு செய்யப்பட்டு, வருவாய்த் துறையின் உரிய சரிபார்ப்புக்குப் பின்னர் சான்றிதழ்கள் மாணவர்கள் பயிலும் பள்ளியின் மூலமாகவே வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நேரம் மற்றும் அலைச்சல் குறைவதுடன், தேவையான சான்றிதழ்களை எளிதாகவும் உரிய காலத்திலும் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இணையவழியில் வழங்கப்படும் சான்றிதழ்களில் க்யூஆர் குறியீடு இடம்பெறும். இதனைப் பயன்படுத்தி சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை உடனடியாக சரிபார்க்க முடியும். இதன் மூலம் போலிச் சான்றிதழ்களின் பயன்பாட்டைத் தடுப்பதுடன், கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை எளிதில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். மேலும், இத்தளத்தில் வழங்கப்படும் மின்னணு சான்றிதழ்களை பொதுமக்கள் பாதுகாப்பாகப் பெற்று பயன்படுத்தும் வகையில் டிஜி லாக்கர் வசதியும் இணையவழி தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ்களை டிஜி லாக்கர் வாயிலாகப் பெற்று, தேவையான நேரங்களில் மின்னணு வடிவில் பயன்படுத்துவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முயற்சி, வருவாய்த்துறை சேவைகளை பொதுமக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் வழங்குவதுடன், பொதுமக்களின் நேரம் மற்றும் அலைச்சலைக் குறைத்து, மின்னணு நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையாக அமையும் என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தெரிவித்துள்ளது. இணையவழி சேவை துவக்க நிகழ்ச்சியில் அமைச்சர் சிவக்கொழுந்து, எதிர்க்கட்சி தலைவர் நாஜிம், ஏகேடி ஆறுமுகம் எம்எல்ஏ, மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சான்றிதழை விரைவாக வழங்க புதிய இணையதள சேவை

## முதல்வர் ரங்கசாமி துவக்கிவைப்பு

**புதுச்சேரி, ஆக. 11–**

குடியிருப்பு, சாதி, வருமான சான்றிதழ்களை விரைவாக கொடுக்க புதிய இணையவழி சேவைதளத்தை முதல்வர் ரங்கசாமி துவக்கி வைத்தார்.

புதுச்சேரி அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் மக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் வருவாய்த்துறை சேவைகளை எளிமையாகவும், விரைவாகவும் வழங்கும் நோக்கில் தேசிய தகவலியல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் https://serviceonline.gov.in எனும் புதிய இணையவழி சேவைத் தளத்தை உருவாக்கியுள்ளது.

இதனை முதல்வர் ரங்கசாமி தொடங்கி வைத்தார். இதன் மூலம் பொதுமக்கள் குடியிருப்புச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், சாதி சான்றிதழ், வாரிசு சான்றிதழ், பட்டா பெயர் மாற்றம் உள்ளிட்ட பல்வேறு வருவாய்த் துறை சேவைகளுக்கு இணைய வழியில் எளிதாக விண்ணப்பித்து, சேவைகளைப் பெற முடியும்.

இது குறித்து முதல்வர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசு நலத்திட்டங்களுக்குத் தேவையான சான்றிதழ்களைப் பெறுவதற்காக பொதுமக்கள் வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு நேரில் வர வேண்டிய தேவையைக் குறைத்து, சேவைகளை எளிதில் பெற வழிவகை செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பள்ளி மாணவர்களுக்கு கல்வி, உதவித்தொகை மற்றும் பிற தேவைகளுக்காக குடியிருப்பு, வருமானம் மற்றும் சாதி சான்றிதழ்கள் அடிக்கடி தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு, மாணவர்களும் பெற்றோர்களும் இச்சான்றிதழ்களுக்காக வருவாய்த் துறை அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியத்தைத் தவிர்க்கும் வகையில் இச்சிறப்பு இணையவழி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வரும் 17ம் தேதி முதல் புதுச்சேரியில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பள்ளி மாணவர்களும் இவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பெற்றோர்கள் தேவையான ஆவணங்களை சம்பந்தப்பட்ட பள்ளியில் சமர்ப்பித்தால் போதுமானது. பள்ளி நிர்வாகத்தின் ஒருங்கிணைப்புடன் விண்ணப்பங்கள் இணையவழியில் பதிவு செய்யப்பட்டு, வருவாய்த் துறையின் உரிய சரிபார்ப்புக்குப் பின்னர் சான்றிதழ்கள் மாணவர்கள் பயிலும் பள்ளியின் மூலமாகவே வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நேரம் மற்றும் அலைச்சல் குறைவதுடன், தேவையான சான்றிதழ்களை எளிதாகவும் உரிய காலத்திலும் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# ஆன்லைனில் வருவாய்த்துறை சான்றுகள் சேவை முதல்வர் ரங்கசாமி தொடங்கி வைத்தார்

## 17 முதல் பள்ளியின் மூலமே சான்றிதழ்கள் வழங்கப்படும்

புதுச்சேரி, ஆக.11–

புதுச்சேரி அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் வருவாய்த்துறை சேவைகளை எளிமையாகவும், விரைவாகவும் வழங்கும் நோக்கில் தேசிய தகவலியல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய இணையவழிச் சேவைத் தளம் **Portal:https://serviceonline.gov.in)** சேவைத் தளம் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நேற்று புதுச்சேரி சட்டசபையில் நடைபெற்றது. இதில் முதல்வர் ரங்கசாமி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் விபி சிவக்கொழுந்து, ஏகேடி எம்எல்ஏ, கலெக்டர் குலோத்துங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சேவை குறித்து முதல்வர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

இப்புதிய இணையவழி சேவைத் தளத்தின் மூலம் பொதுமக்கள் குடியிருப்பு, வருமானம், சாதி/சமூகச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ், பட்டா பெயர் மாற்றம் உள்ளிட்ட பல்வேறு வருவாய்த் துறை சேவைகளுக்கு தங்களது இருப்பிடத்திலிருந்தே இணையவழியில் எளிதாக விண்ணப்பித்து, சேவைகளைப் பெற முடியும்.

கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசு நலத்திட்டங்களுக்குத் தேவையான சான்றிதழ்களைப் பெறுவதற்காக பொதுமக்கள் வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு நேரில் வர வேண்டிய தேவையைக் குறைத்து, சேவைகளை எளிதில் பெற வழிவகை செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**இணையவழி விண்ணப்பத்தின் முக்கிய நன்மைகள்:**

விண்ணப்பங்களை எங்கிருந்தும் எளிதாக பதிவு செய்யலாம். தேவையற்ற நேர விரயம் மற்றும் அலுவலகங்களுக்கு நேரில் செல்லும் சிரமம் தவிர்க்கப்படும். விண்ணப்பத்தின் நிலையை இணையவழியில் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்ப முன்னேற்றம் குறித்து குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) மற்றும் மின்னஞ்சல் (இ மெயில்) மூலம் தகவல்கள் அனுப்பப்படும். சேவைகள் வெளிப்படையாகவும், விரைவாகவும் வழங்கப்படும்.

அடிக்கடி தேவைப்படும் சான்றிதழ்களுக்காக மாணவர்களும் பெற்றோர்களும் வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியத்தைத் தவிர்க்கும் வகையில் இச்சிறப்பு இணையவழி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**17 முதல் பள்ளியின் மூலமே சான்றிதழ்கள் வழங்கப்படும்**

அதன்படி, 17.08.2026 முதல் புதுச்சேரியில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பள்ளி மாணவர்களும் இவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பெற்றோர்கள் தேவையான ஆவணங்களை சம்பந்தப்பட்ட பள்ளியில் சமர்ப்பித்தால் போதுமானது. பள்ளி நிர்வாகத்தின் ஒருங்கிணைப்புடன் விண்ணப்பங்கள் இணையவழியில் பதிவு செய்யப்பட்டு, வருவாய்த்துறையின் உரிய சரிபார்ப்புக்குப் பின்னர் சான்றிதழ்கள் மாணவர்கள் பயிலும் பள்ளியின் மூலமாகவே வழங்கப்படும்.

**க்யூஆர் கோடு மூலம் சரி பார்க்கலாம்**

இணையவழியில் வழங்கப்படும் சான்றிதழ்களில் க்யூஆர் குறியீடு இடம்பெறும். இதனைப் பயன்படுத்தி சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை உடனடியாக சரிபார்க்க முடியும். இதன் மூலம் போலிச் சான்றிதழ்களின் பயன்பாட்டைத் தடுப்பதுடன், கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை எளிதில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

**டிஜி லாக்கர் வசதி**

மேலும், இத்தளத்தில் வழங்கப்படும் மின்னணு சான்றிதழ்களை பொதுமக்கள் பாதுகாப்பாகப் பெற்று பயன்படுத்தும் வகையில் டிஜிலாக்கர் வசதியும் இணையவழி தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ்களை டிஜிலாக்கர் வாயிலாகப் பெற்று, தேவையான நேரங்களில் மின்னணு வடிவில் பயன்படுத்துவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முயற்சி, வருவாய்த்துறை சேவைகளை பொதுமக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும், வழங்குவதுடன், பொதுமக்களின் நேரம் மற்றும் அலைச்சலைக் குறைத்து, மின்னணு நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையாக அமையும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.